நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 48/2022

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கனகராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனியப்பன் |
| கிராமம் | : | மணக்காடு |
| வட்டம் | : | மேட்டு்ர |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.39PM )

1. நான் தற்போது மணக்காட்டில் குடியிருக்கிறேன். பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 07.03.2021ம் தேதி மாலை 4 மணி அளவில் நான் சம்பவம் நடந்த இடத்தில் இருந்தேன். சின்னசாமி இருவருக்கும் பொதுவான தடத்தின்வழயாக நடந்து சென்ற போது சின்னசாமியை மினியன், வையாபுரி,

மாரியப்பன் ஆகியோர் தடுத்து நிறுத்தி கெட்ட வார்த்தையால் திட்டினார்கள்.

2. மினியன் விறகு கட்டையால் சின்னசாமியின் தலையில் அடித்தார். பிறகு வையாபுரி, மாரியப்பன் இருவரும் விறகு கட்டையால் இடுப்பில் அடித்தார்கள். சண்டையை தடுக்க வந்த சின்னசாமியின் மனைவி லட்சுமியை வையாபுரி கீழே தள்ளி அவர் கையில் இருந்த விறகு கட்டையால் இடுப்பு மற்றும் வலது தோள்பட்டையில் அடித்தார். மூன்று எதிரிகளும் சின்னசாமியை கெட்ட வார்த்தையால் திட்டி கட்டையை காண்பித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு கட்டையை அங்கேயே போட்டு விட்டு சென்று விட்டார்கள். ஆஜர் எதிரிகள் தான் அ.சா1 யை அடித்தார்கள். இந்த சம்பவத்தை எனது அக்கா மகன் ராஜா என்பவர் போன் மூலமாக வீடியோ எடுத்தார் அதை நான் பென் டிரைவில் காப்பி செய்து வைத்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை குவிமுச பிரிவு 231(2) ன்படி மனுதாக்கல் செய்யப்பட்டதன் பேரில் அ.சா 1 முதல் 3 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த பின்னிட்டு இந்த சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.51PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**